**செய்தி வெளியீடு எண்:226** **நாள்:04.06.2021**

# செய்தி வெளியீடு

## வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியில் பூங்காவில் உள்ள ஆசிய சிங்கங்களுக்கு கோவிட்–19 தொற்று ஏற்பட்டுள்ளது தொடர்பான செய்தி வெளியீடு

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியில் பூங்காவில் உள்ள 13 ஆசிய சிங்கங்களுக்கு கோவிட் –19 அறிகுறிகள் உள்ளதாக கடந்த 03.06.2021 அன்று கண்டறியப்பட்டது. சில சிங்கங்களுக்கு அறிகுறிகள் தென்பட்டதுடன் நீலா என்ற 9 வயது உள்ள பெண் சிங்கம் அன்று மாலை உயிரிழந்தது, இதேபோன்ற நிகழ்வுகள் ஐதராபாத், ஜெய்பூர் மற்றும் உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ள இட்டாவா ஆகிய இடங்களில் உள்ள, ஆசிய சிங்கங்கள் கானுலா நடைபெறும் பூங்காக்களில் உள்ள சிங்கங்களுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து அனைத்து ஆசிய சிங்கங்களும் தனிமைப்படுத்தப்பட்டது. பூங்கா அதிகாரிகளால் உயிரியில் பூங்காவில் உள்ள சிங்கங்கள் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலை கழகத்தினரை கலந்தாலோசித்து நோயுற்ற சிங்கங்களை குணப்படுத்தும் பொருட்டு நோய் எதிர்ப்பு மருந்துகள் மற்றும் இதர மருந்துகள் வழங்கப்பட்டது. தொற்றிக்கேற்ப மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டது. சிங்கங்களின் சளி மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இந்திய தேசிய மருத்துவ கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, போபாலில் உள்ள ICAR-NIHSAD என்ற ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது.

மேலும் அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலை கழகம் மருத்துவ வல்லுநர்களை பூங்காவின் கால்நடை மருத்துவர்களுக்கு உதவும் பொருட்டு அனுப்பியுள்ளது. இக்குழுவானது பூங்காவில் உள்ள இதர விலங்களுக்கு SARS-CoV2 தொற்று பரவாமல் பாதுகாப்பது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும் தடுப்பு நடவடிக்கையாக விலங்குகளை கையாளும் பணியாளர்கள் உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளுமாறு கடந்த 03.06.2021 அன்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. பூங்காவில் உள்ள விலங்குகளின் நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடந்த 20.04.2021 முதல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயிரியில் பூங்காக்களில் பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 03.06.2021 அன்று விலங்குகளை கையாளும் பணியாளர்களுக்கு சிறப்பு முகாம் ஒன்று நடத்தப்பட்டு 61 சதவீத பணியாளர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. விலங்குகளிடமிருந்து எடுக்கப்பட்ட SARS-CoV2 நுண்ணுயிரியின் மரபணுவினை வகைப்படுத்தும் பணியினை மேற்கொண்டு வரும் ஆய்வகமான LaCONES-CCMB என்ற ஆய்வகம் விலங்குகளுக்கு சிகிச்சை அளிப்பது குறித்து உரிய அறிவுரைகளை வழங்கியுள்ளது. மேலும் துறையின் அலுவலர்கள் இது குறித்து தேசிய அளவில் உள்ள துறை நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகளுடன் கலந்தாலோசனை செய்து வருகின்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**